## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No.181/2017

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW-1 |
| Name | : Thiru.Ezhumalai |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2018.

**முதல் விசாரணை -**

நான் தாம்பரம் இரயில்வே பாதுகாப்பு துறையில் ஆய்வாளராகப் பணி புரிந்து தற்பொழுது பணி ஓய்வு பெற்று விட்டேன். சம்பவ காலமான 21.06.2014 அன்று நான் பணியில் இருந்த பொழுது செங்கல்பட்டு ஆய்வாளர் பணியில் இல்லாத காரணத்தினால் கூடுதல் பொறுப்பு வகித்து வந்தேன். 21.06.2014 அன்று இரவு சுமார் 11.40 மணிக்கு வண்டி எண் 12666 கன்னியாகுமரியிலிருந்து ஹவுரா செல்லக்கூடிய எக்ஸ்பிரஸ் இரயில் அன்று இரவு 9.46 மணிக்கு செங்கல்பட்டு பிளாட்பார்ம் 6 ல் வரும்பொழுது பிரன்ட் எஸ்எல்ஆர் ல் பணியிலிருந்த சாமிசாதன், தலைமைக் காவலர் செக் செய்யும் பொழுது அடுத்த பெட்டியில் பயணம் செய்த பயணிகள் மேற்கண்ட வண்டி மேல்மருவத்தூர் தாண்டும் பொழுது பார்சல் வேனிலிருந்து முதல் எஸ்எல்ஆர் யிலிருந்து மூட்டைகள் கீழே விழுந்ததாக சத்தம் கேட்டு மேற்படி தலைமைக் காலரிடம் கூறினார்கள். அவர் நிலையத்தில் இருந்த உதவி ஆய்வாளர் சுனில் குமார் அவரிடம் தெரிவிக்க, அவர் துணை உதவி ஆய்வாளர் திரு.தியாகராஜன் மற்றும் காவலர்கள் மேற்படி சம்பவ இடத்திற்கு விரைந்ததாகவும், எனக்கு தகவல் கொடுத்தார்கள். நான் உடனே தாம்பரம் இரயில்வே நிலையத்திலிருந்து திரு.திலீப் குமார் மற்றும் மனோகரன் தலைமைக் காவலர் மற்றும் காவலர்களுடன் சம்பவ இடமான மேல்மருத்தூர் மற்றும் மதுராந்தகம் இரயில் நிலையங்களுக்கு இடையே அதாவது கி.மீ.94|5 மற்றும் 92|15 க்குமிடையில் ஏலக்காய் மூட்டைகள் விழுந்து கிடந்தன. அன்று அதிகாலை 3.30 மணியளவில் நானும் செங்கல்பட்டு உதவி ஆய்வாளர் மற்றும் சகாக்களுடன்

மேற்படி இடத்தில் தேடிப் பார்த்ததில் 16 ஏலக்காய் மூட்டைகள் ஒவ்வொன்றும் 100 முதல் 200 மீ இடைவெளியில் இரயில்வே தடத்தின் வலது தடத்தில் விழுந்து கிடந்தன. அந்த 16 மூட்டைகளில் 1 மூட்டை முற்றிலுமாக கிழிந்து சிதறி கிடந்தது. அந்த ஏலக்காய்களை சேகரிக்க முடிய வில்லை. சிறிதளவு ஏலக்காய் மட்டுமே இருந்தது. அந்த 15 மூட்டைகள் மற்றும் 1 சிதறிக் கிடந்த மூட்டை ஆக மொத்தம் 16 மூட்டைகள் ஒரு பார்வை மகசர் மூலம் கைப்பற்றி செங்கல்பட்டு ஆர்பிஎ.ஃப் நிலையம் கொண்டு வந்தேன். அந்த சம்பவத்திற்கான அக்கரன்ஸ் ரிப்போர்ட், 22.06.2014 அன்று கனம் கோர்ட்டார் அவர்களிடம் சமர்ப்பித்தேன். இந்த சம்பவத்தில் ஈடுபட்டிருந்த குற்றவாளிகளை எக்மோர் ஆர்பிஎ.ஃப் கு.எண் 10|2014 ல் சையத் இப்ராஹிம் 2 வது எதிரி 26.09.2014 அன்று கைது செய்தார்கள். அந்த கைது நடவடிக்கையின் போது அவரிடம் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளாக இருந்த திரு.வீரன், மற்றும் ஜோதி ஆகியோர் முன்னிலையில் விசாரிக்கும் போது ஓடும் இரயிலில் இருந்து பொருட்களை தள்ளி விட்டு எடுத்துச் சென்று வெளியில் விற்று சம்பாதிப்பதாகவும் அவர்களுடன் உடந்தையாக சையத் சித்திக் அலி எதிரி ஏ1 மற்றும் சண்முகம் என்கிற ஜம்பு ஆகியோரும், எதிரிகளைக் கைது செய்யும் பொழுது சாட்சிகளாக இருந்தவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எக்மோர் கு.எண் 10|2014 ல் ஏ2 வைக் கைது செய்ய திரு.பாலகிருஷ்ணன், இளநிலை உதவியாளர் அவர்களையும் விசாரணை செய்து அவருடைய வாக்குமூலத்தினையும் பதிவு செய்தேன். செங்கல்பட்டு நிலைய தலைமைக் காவலர் திரு.சாமிநாதன் மேற்படி வண்டியில் பணியில் இருக்கும் பொழுது ஏலக்காய் திருடும் பொழுது பயணிகளை விசாரித்த நபரான அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி ஏலக்காய் மூட்டைகள் நீண்ட நாளாக இருந்தால் அழுகும் நிலை வந்து விடும் என்ற காரணத்தினால் கனம் கோர்ட்டார் அவர்களுக்கு ஒரு மனு செய்து சேம்பிளாக ஏலக்காய் மற்றும் இரயில்வே மார்க் அடங்கிய கோணிப்பைகளை தக்க வைத்துக் கொண்டு ஏலக்காய் மூட்டைகளை அவற்றின் உரிமையாளரிடம் அனுப்ப உத்தரவு கேட்டிருந்தேன். கோர்ட்டாருக்கு சமர்ப்பித்த பார்ம் 91 ஐ மேற்படி ஏலக்காய் மூட்டைகளை மதுரையிலிருந்து ஹவுராவுக்கு செய்யப்பட்டதற்கான இரயில்வே மார்க்குகளுடன் கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த எடை ஆகியவற்றைக் குறித்து பார்ம் 91 ல் கனம் கோர்ட்டாருக்கு சமர்ப்பித்துள்ளேன். இந்த விசாரணையின் போது மதுரையில் மேற்படி ஏலக்காய் மூட்டைகள் ஹவுராவுக்கு பதிவு செய்ததற்கான, சம்பந்தப்பட்ட இரயில்வே பார்சல் கிளெர்க்குகள் திரு.ஓ.மனோகரன் மற்றும் டீ.சந்திரமோகன் அவர்களை விசாரித்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் மதுரையிலிருந்து ஹவுராவிற்கு மற்ற ஏலக்காய் மூட்டைகளை மொத்தம் 61 மூட்டைகளை பார்சல் லேபிள் மற்றும் இரயில்வே ரசீது ஆகியவைகளைப் பெற்றுள்ளேன். செங்கல்பட்டு பார்சல் கிளெர்க் திரு.சௌந்தரராஜன் அவர்கள் மேற்படி கோர்ட்டாரிடம் உத்தரவு பெற்று அந்த ஏலக்காய் மூட்டைகளை வேறு கோணிப் பைகளில் மாற்றி இரயில்வே குறியீடுகள் இட்டு, 09.08.2014 அன்று வண்டி எண் 12666 கன்னியாகுமரியிலிருந்து ஹவுரா செல்லும் இரயிலில் முன் பகுதியில் இருந்த எஸ்எல்ஆர் ல் ஏற்றி சீல் வைக்கப்பட்டு, ஆர்பிஎ.ஃப் எஸ்காடுடன் ஹவுரா இரயில் நிலையம் அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி சௌந்தரராஜன் அவர்களை விசாரித்து அவருடைய வாக்குமூலம் பெற்றேன். மேற்படி கு.எண் 2|2014 ல் மீதமுள்ள சாட்சிகளை செங்கல்பட்டு நிலைய ஆய்வாளர் திரு.ரமேஷ் அவர்கள் விசாரணை முடித்தார். மேற்படி குற்ற எண்ணின் குற்ற அறிக்கையை 24.04.2015 அன்று என்னால் கனம் கோர்ட்டார் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இன்று நீதிமன்றத்தில் என் முன்பாகக் காட்டப்படும் ஆவணமும் நான் ஏற்கெனவே என்னால் தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆவணம்

22.06.2014 தேதியிட்ட அக்கரன்ஸ் ரிப்போர்ட் நம்பர் 1 **அதசாஆ 1** ஆகும். மேலும், சாட்சிகளின் முன்னிலையில் 22.06.2014 அன்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் பட்டியலிட்ட சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்தேன். மேற்கண்ட ஆவணங்கள் **அதசாஆ எண் முறையே 2 மற்றும் 3** ஆகும். கைப்பற்றப்பட்ட 16 ஏலக்காய் மூட்டைகள் படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்தேன். மேற்கண்ட படிவம் 95 **அதசாஆ 4** ஆகும். இன்று நீதிமன்றத்தில் என் முன்பாகக் காட்டப்படும் நான் கைப்பற்றிய 16 ஏலக்காய் மூட்டைகளின் புகைப்படமும், சிடியும் என்னால் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டவை தான். மேற்கண்ட புகைப்படங்கள் எண் 1 முதல் 8 வரை அரசு தரப்பில் **சா.பொ.எண் 1 வரிசை 1 முதல் 8** வரை ஆகும். மேலும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து ஏலக்காய், விலையுயர்ந்த பொருள், நாளடைவில் கெட்டுப் போகக் கூடிய பொருள் என்பதால் நீதிமன்றத்தில் வழக்கு சொத்தை டெஸ்பேச் செய்ய அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்து, நீதிமன்ற உத்தரவின் பேரில் சம்பந்தப்பட்ட வழக்கு சொத்தை உரியவர்களிடம் ஒப்படைத்தேன். மேற்கண்ட நீதிமன்றத்தில் நான் செய்த மனு மற்றும் நீதிமன்ற உத்தரவானது **அதசாஆ எண் முறையே 5 மற்றும் 6** ஆகும். மேலும் எழும்பூர் இரயில்வே பாதுகாப்பு படை ஆய்வாளர் அவர்கள் எதிரியிடமிருந்து வேறொரு கு.எண் கைது செய்யும் பொழுது பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். இவ்வழக்கின் விசாரணைக் கோப்பினை தொடர் விசாரணைக்காக வேறொரு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**குறுக்கு விசாரணை -** இல்லை.

Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.